# அரசு மருத்துவக் கல்லூரி அரியலூர்

## உடற்கூறியல் துறை

**முழு உடல் தானம் வழங்குபவர்** மற்றும் **நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிகுறிப்புகள்** மற்றும் **விதிமுறைகள்.**

1. முழுஉடல் தானம் செய்ய விரும்புவோர்கள் பதிவு செய்ய வரும் போது எடுத்து வரவேண்டிய ஆவணங்கள்
    1. ஆதார் அட்டை நகல் அல்லது குடும்ப அட்டை நகல்
    2. பாஸ்போர்ட் அளவு போட்டோ -4
    3. இறந்தபின் உடலை ஒப்படைக்கபோகும் உறவினர் இருவரின் அடையாள அட்டை நகல் மற்றும் புகைப்படம்.
2. முழுஉடல் தானம் வழங்குபவர் மரணமடைந்த பின்னர் அவருடைய உடலை 6 மணி நேரத்திற்குள் இந்த மருத்துவ கல்லூரியின் உடற்கூறியல் துறைக்கு காலை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.
3. இந்த நேரத்தில் அல்லாத நேரத்தில் இறந்தாலோ அல்லது விடுமுறை நாட்களில் இறந்தாலோ அரசு மருத்துவமனையின் இருப்பிட அதிகாரியிடம் உடலை ஒப்படைக்க வேண்டும். மருத்துவமனையின் பிணவரையில் வைக்கப்பட்டு அதன் பின்னர் இத்துறையால் பெற்றுக்கொள்ளப்படும்

4. முழு உடல் தானம் ஏற்க முடியாமைக்கு சில முக்கிய காரணங்கள் :
    1. மருத்துவ சட்ட சார் பிரச்சனைகள் ( பிரேத பரிசோதனை செய்த உடல், அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் மரணம், தற்கொலை, விஷம் அருந்தியதால் ஏற்பட்ட மரணம்)
    2. தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருந்தால் ( HIV, TB, மஞ்சள் காமாலை etc...)
       சில மருத்துவநிலைகளால் உடலில் குறிப்பிடதக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால்
       ( ஊனம், உடல்உறுப்பு அகற்றப்படுதல், படுக்கை புண் )
    3. இறந்த உடலை ஆராய்ந்த பின் உடல் தானத்தை குறித்து மருத்துவர் எடுக்கும் முடிவே இறுதியானது.

5. இறந்தவர்களின் உடலை ஒப்படைக்கும் போது இறந்தவரின் வாரிசுகளோ அல்லது குடும்ப உறுப்பினர்களோ கட்டாயம் வரவேண்டும்.
6. மரணமடைந்தவரின் உடலை ஒப்படைக்க வருபவர்கள் கட்டாயம் கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
    1. பதிவு பெற்ற மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட இறப்பு சான்று
    2. முழுஉடல் தான பதிவு அட்டை
    3. உடலை ஒப்படைக்க வரும் குடும்ப நபரின் ஆதார் அட்டை நகல் ( அல்லது ) குடும்ப அட்டை நகல்

## முழு உடல் தானம் செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**துறைத்தலைவர், உடற்கூறியல் துறை**

அரசு மருத்துவக் கல்லூரி

மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகில், செந்துறை ரோடு, அரியலூர்.

**இறந்தவர்களின் உடல் தான்...** **மருத்துவ மாணவர்களின் ஆசான்...**

ஆதலால் **உடல் தானம் செய்வீர்**

மேலும் விபரங்களுக்கு...

**04329-299337, செல் : 9443446001, 93858 32554**